மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்வது, பெரியார் மாவட்டத்திலே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த........(மணியடிக்கப்பெற்றது).

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடைக்கின்ற எண்ணெய் பெரும்பாலும் நன்னிலம் பகுதியைச் சேர்ந்ததாக இருக்கிறது. அப்படி எண்ணெய் எடுக்கின்ற நேரத்தில் அவர்கள் கொண்டு வருகின்ற வண்டி, வாகனங்கள் மிகக் கன ரகமாக இருக்கின்றன. கிராமப் புறங்களில் செல்கிற நேரத்தில், கிராமப்புறச் சாலைகள் மிக அதிகமாகப் பழுதுபட்டு விடுகின்றன. எனவே, கிடைக்கின்ற ராயல்ட்டியில் அந்த ஒன்றியங்களுக்கு உரிய நிதி, ஒரு விழுக்காடு விகிதம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசிற்குப் பல்வேறு வகையிலே வருகின்ற வருமானங்களைக் கொண்டு, சாலை பழுது பார்த்தல் போன்ற கிராம நலத் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணம் போன்ற பகுதிகளில் எடுக்கின்ற கச்சா எண்ணெய்கள், லாரி, டிரக்கு போன்ற வாகனங்களால் சென்னைக்கு எடுத்து வரப்படுகின்றன. இப்படி எடுத்து வருகிறபோது, அந்தப் பகுதியில் இருக்கின்ற பாலங்கள் எல்லாம் மிகவும் பழுதடைந்து விடுகின்றன. சமீபத்திலேகூட, தரங்கம்பாடி அருகிலுள்ள பாலம் பல பெரிய டிரக்குகள் வந்து பல இடிபாடுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் தடுப்பதற்கு—மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடி வரை ரயில் நிறுத்தப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன—தரங்கம்பாடியிலிருந்து ரயில் மூலமாக அந்தக் கச்சா எண்ணெய்களை சென்னைக்கு எடுத்துக் கொண்டு வர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது எண்ணெய் கிடைக்கின்ற அளவைப் பொறுத்து, அதை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் அவ்வப்போது விரிவுபடுத்தப்படும்.

தந்தை யார் என்பதை அறிவதற்கான சோதனைக் கூடம்

*6614 திரு. வே. தங்கபாண்டியன் ;

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு தடய அறிவியல் துறையில் 'Paternity Testing Centre' என்ற தனி அமைப்பு ஒன்றை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

1990 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, இல்லை. ஃபாரன்ஸிக் சயன்ஸ் டிபார்ட்மென்ட்டோடு அது இணைந்தே இருக்கிறது.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சோதனைக் கூடங்களுக்கு அனுப்பப்படுகிற ரத்தம், சோதனை செய்யப்பட்டு, அதனுடைய விவரங்கள் கிடைப்பதற்குக் காலதாமதம் ஆகிறது என்றும், அதன் மூல மாகவே சில வழக்குகளில் கூட காலதாமதம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தாலும் அதைத் தேவையான அளவுக்கு விஸ்தரித்தும், அல்லது—நான் அதைப் பார்த்தது இல்லை—அதை நவீனப்படுத்தி உடனுக்குடன் அதனுடைய சோதனைகள் பற்றிய விவரங்கள் கிடைப்பதற்கு அரசு ஏற் பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதில் விரைவு வேண்டும். ஆனால் அவசரம் கூடாது. க்விக் டெசிஷன் என்பதற்கும் ஹேஸ்ட்டி டெசிஷன் என்பதற்கும் உள்ள வேறுபாடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஒரு குழந்தை யாருடைய குழந்தை என்று அறிவதற்குக் கூட இந்த ஆய்வு இப்போது தேவைப் படுகிறது. அண்மையிலே கூட, இது போன்ற ஒரு வழக்கு வந்து, அந்தக் குழந்தை யாருடையது என்று தீர்மானிப்பதற்கு நீதிமன்றம் அந்தச் சோதனைக்கு இந்த ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பிவைத்து அவர்கள் சோதனை செய்து அறிவித்தார்கள். அதிலே விரைவாக அல்லது அவசரமாக என்ற அந்த இரண்டு நிலையில் அவசர முடிவு எடுக்கப்பட்டிருக்குமேயானால், தவ றான தீர்ப்பு கூட வழங்கப்பட்டிருக்கக் கூடும். எனவே, இதிலே விரைவு தேவை என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இதிலே அவசரம் காட்டக் கூடாது.

திரு. செ. நூர்முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை யார், தாய் யார் என்பன போன்ற பல்வேறு சிக்கலான குடும்பப் பிரச்சினைகள் உள்ள வழக்குகள் ஏராள மாக தற்போது வந்து கொண்டிருக்கின்றன. எனவே, இப்படிப் பட்ட குடும்பப் பிரச்சினைகள் சம்பந்தமான பல்வேறு சிக்கல் களுடைய வழக்குகள் ஏராளமாக வருவதால், தமிழகத்தில் குடும்பக் கோர்ட்டுகள் மூலமாக அவை தீர்வு செய்யப்படு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

9—10 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த, தந்தை அல்லது தாய் யார் என்பது போன்ற சிக்கலான பிரச்சினை எழுகிற நேரத்தில்

ஒரு குழந்தைக்கு 2 தாய்கள் உரிமை கொண்டாடுகின்ற நிலைமை கூட அண்மையில் ஏற்பட்டது. இதிலே அந்தக் குழந்தையின் ரத்தம், அந்தத் தாயின் ரத்தம், எச்சில் போன்ற பல சோதனைகள் செய்யப்பட்ட பிறகுதான் முடிவு செய்யப்பட வேண்டியிருக்கிறது. எனவே, இதற்கு இந்தச் சோதனைக் கூடம்தான் தகுதியானது.

மதுரையில் விளையாட்டுத் திடல்.

*3091 திரு. சோ. பால்ராஜ்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

மதுரை மாநகரில் மாணவ, மாணவிகளின் விளையாட்டுப் பயிற்சிக்காக அகில இந்திய தரத்திலும், தகுதியிலும் எல்லா வசதிகளும் கொண்ட விளையாட்டுத் திடல் அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாநகரில் மாணவ மாணவிகளின் விளையாட்டுப் பயிற்சிக்காக அகில இந்திய தரத்திலும், தகுதியிலும் எல்லா வசதிகளும் கொண்ட விளையாட்டரங்கம் நான்கு மின்னொளி கோபுரங்களுடன் (Flood Light Towers) மதுரையில் ஏற்கெனவே உள்ளது.

திரு. சோ. பால்ராஜ்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இப்போது இருக்கின்ற விளையாட்டு மைதானம் உலக அரங்கில் குறிப்பாக இந்திய அரங்கில் எல்லா உபகரணங்களோடு, சகல வசதிகளோடு அமைந்து இருக்க வேண்டும் என்று கேட்பதோடு குறிப்பாக வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக எல்லிஸ் நகரப் பகுதியில் இப்படி ஒரு விளையாட்டு மைதானம் அமைப்பதாக இருந்தது, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டு அரங்கம் மிகப் பெரிய ஒன்று. 26 ஏக்கர் பரப்பளவில் ஏறத்தாழ 22 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டு இது அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே குறிப்பிடப்பட்ட விளையாட்டுக்கான 'track, grounds Pit' இவை எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் ஏற்படுத்த வேண்டுமென்று கருதப்படுமானால் அது பற்றித் தனி ஆலோசனை தேவைப்படும்.

திரு. சோ. பால்ராஜ்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற மைதானத்திற்கு நமது தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய பெயர் முன்பு